ஆசிரியர் வழிகாட்டி

கிறிஸ்தவ வாழ்வும் சாட்சியமும்
பயிற்சிநெறி

கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை புதுப்பித்து
தம் அயலாரோடு அதனைப் பகிர்ந்து கொள்வதற்கான
நான்கு பாகம் கொண்ட பயிற்சித் திட்டம்

பொருளடக்கம்

		பக்கம்
	முகவுரை	
1.	வலுவுள்ள கிறிஸ்தவ வாழ்வு	9
	அ. அறிமுகம்	9
	ஆ. பாடம்	10
	இ. செயற் திட்டம்	12
2.	வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு	17
	அ. அறிமுகம்	17
	ஆ. பாடம்	18
	இ. செயற்திட்டம்	24
3.	கிறிஸ்தவனின் சாட்சி	29
	அ. அறிமுகம்	29
	ஆ. பாடம்	31
	இ. செயற்திட்டம்	35
4.	பின்தொடர்பு	39
	அ. அறிமுகம்	39
	ஆ. பாடம்	41
	இ. செயற்திட்டம்	43
5.	அனுபந்தம்	
	அ. சிறுகுழுவிற்கான வேதபாட அடிப்படை	அனுபந்தம் 1
	ஆ. வசனபாடத்திற்கான அடிப்படை	அனுபந்தம் 2
	இ. வரைப்பட விளக்கம்	அனுபந்தம் 3–13
	ஈ. பயிற்சிநெறியைப் படிப்பிக்கும் வழிமுறைகள்	அனுபந்தம் 4

முகவுரை

கிறிஸ்தவ வாழ்வும் சாட்சியும் பயிற்சி நெறியைச் சார்ந்தே பில்லிகிரகாமின் நற்செய்தி ஊழியம் கடந்த 40 ஆண்டுகளாக எழுதப்பட்டு வந்திருக்கின்றது. இந்த நான்கு பாக பயிற்சி நெறியானது, கிறிஸ்தவர்கள் வாழ்வில் புது உத்தேசத்தைத் கொண்டு வரும் நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கிறது. அத்தோடு அவர்கள் தம் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளவும், புதிய விசுவாசிகளைப் பயிற்றுவிக்கவும் இவ்வேடு உதவும்.

உலக தூதுரைக்கான எமது குழுவினராகிய நாம் இப்புத்தகத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமிதமடைகின்றோம். உங்கள் வாழ்க்கையில் இதற்கு முதலிடம் கொடுப்பதற்காக நன்றியும் கூறுகின்றோம். இதனூடாக நீங்கள் கற்பிக்கும் விஷயங்களினால் நீங்களும் கூட பயிற்றுவிக்கப்படுகின்றீர்கள்.

இப்பாடத்திட்டத்தை பயிற்றுவிக்க நீங்கள் செய்யும் ஆயத்தமானது ஒரு வளர்ச்சியுடன்கூடிய அனுபவமாயிருக்கும். எப்போதுமே தேவனுடைய வசனத்தை அவரது பரிசுத்த ஆவியின் வல்லமையினால் பகிர்ந்து கொள்ளும் போது தேவன்தாமே நம் வாழ்வையும் மகிமைப்படுத்தி ஆசீர்வதிப்பார். நாம் ஏனையோரைப் பயிற்றுவிக்கவும் உற்சாகப் படுத்துவார்.

''மிஷன் வொர்ல்ட்'' எனப்படும் உலக நற்செய்தி தூதுரையின் ஒரு கருவியாக இப்பயிற்சி உள்ளது. உங்கள் ஈடுபாடு இதில் அவசியப்படுகின்றது. பயிற்சியின் ஒழுங்குமுறைகளில் கட்டுப்பாட்டுடன் இருப்பது உமது ஆன்மீக திருப்பயணமாக அமைகின்றது.

உங்கள் பயிற்றுவிக்கும் திட்டத்திற்கு எம் நன்றியும் வாழ்த்தும் உரித்தாகுக!

வலுவுள்ள கிறிஸ்தவ வாழ்வு



பாடம் ஒன்று

வலுவுள்ள கிறிஸ்தவ வாழ்வு

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறைவனுக்கு மகிமை தரும் பொறுப்புள்ள வாழ்வை வாழக் கடமைப்பட்டுள்ளான். அத்தோடு அவன் இறைவனுக்கான தூதுவனுகவும் செயல்பட வேண்டும். ''எப்படி எங்கே ஆரம்பிப்பது? இதற்காக செய்யப்பட வேண்டியதென்ன?'' என்பது போன்ற கேள்விகளை இந்நிலையில் கேட்கப்படலாம். இதற்கான சிறந்த பதில், எத்தியோப்பிய அமைச்சுக்கு இயேசுவை அறிமுகப்படுத்திய பிலிப்புவின் வாழ்வில் காணலாம் (அப் 8: 26–38)

முதலாவதாக பிலிப்புவின் வாழ்வு கிறிஸ்துவிற்கான சாட்சி பகர்வதாயிருந்து அவருடைய குணவியல்புகளினுல் ஆதித் திருச்சபையின் ஊழியத்திற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தார் (அப் 6: 3–5) ஒரு நல்ல வாழ்வு இறைவனுக்கு மகிமை சேர்ப்பது மட்டுமல்லாமல் உலகிற்கு நல்லதொரு சாட்சியாகவும் அமைகின்றது. ஆண்டவரை அறிந்தவராய் நாமிருக்கின்றேம் என்பதை நமது வாழ்க்கை பறைசாற்றல் வேண்டும்.

இரண்டாவதாக அவருடைய வாழ்விலும் ஊழியத்திலும் பரிசுத்த ஆவியானவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். ''நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்துக்கொள் என்று பிலிப்புடனே சொன்ஞர்'' (அப் 8: 29) நமது வாழ்க்கைக்கு எழில் சேர்ப்பவர் ஆவியானவரே (கலா 5: 22, 23) அவரே நமது ஆசிரியரும் வழிகாட்டியுமாவார். நம்மை திடமாக்கி சாட்சி பகரும் துணிவைக் கொடுப்பவர் அவரே பரிசுத்த ஆவியின் அதிசயமிக்க வளங்களுக்கு எம்மை உட்படுத்தி முழுமையாய் அவரால் நடத்தப்படுவது நமது கடமையாகும். பிலிப்புவும் கூட ஏற்கனவே ஆயத்தப்படுத்தப்பட்டவர் ஒருவரிடம்தான் அழைத்துச் செல்லப்பட்டார்.

மூன்ருவதாக திருமறையின் முக்கிய பங்கினைக் காண்பீர்கள். எத்தியோப்பியன் இசையாய் (ஏசாயா) 53ம் அதிகாரத்தை வாசித்து அதன் பொருளை பிலிப்புவிடம் கேட்கின்ருர். பிலிப்புவும் இயேசுவின் சிலுவைப் பாடுகளை குறிக்கும் இவ் வாசகத்தை கையாண்டு ''இயேசுவை அவருக்குப் போதித்தார்'' (அப் 8: 35) பிலிப்புவுக்கு திருமறை தெரிந்திருந்ததோடு நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளவும் அவர் தயாராயிருந்தார் நாமும் வலிமையான கிறிஸ்தவராயிருக்க வேண்டுமென்ருல் நாமும் திருமறையை பயன்படுத்துமளவிற்கு அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் நம்மால் திருமறையை பகிர்ந்து கொள்ளலாம்.

நான்காவதாக இந்நிகழ்ச்சியில் இறைவனின் தனித்துவ மேம்பாட்டைக் காணுகின்ருேம். எத்தியோப்பியன் ஏசாயா ஆகமத்தை கையிலேந்தியிருக்கவும், பிலிப்புவை அவ்விடம் கொண்டு வந்து விளக்கமளிக்கவும் அவர் செய்கின்ருர். ஆண்டவர் சிறு சிறு காரியங்களைக் கூட கவனிப்பவராகவும் இருப்பது மட்டுமல்ல, சாதாரண மனிதர்களைக் கொண்டு அசாதாரணமான காரியங்களைக் நிறைவேற்றவும் செய்கின்ருர்.

ஐந்தாவதாக வேதாகமம் சாதாரண மக்களைக் கொண்டு வல்லமையாக செயல்படும் கடவுளின் செயல்களைப்பற்றிய பதிவேடாக அமைந்துள்ளது. விசுவாசத்தினுல் அடியெடுத்து வைத்து அவர் நம்மைப் பயன்படுத்துவார் என நம்புவோமாக.

இறை வசனத்தைப் பற்றிக் கொள்ளல்

(எதை எடுத்துரைப்பது)



இறைவனின் கரத்தைப் பற்றிக் கொள்ளல்

(அதை எடுத்துரைக்க வல்லமை)



வீட்டு வேலை முதல் பாடம்

1. கீழ்க்காணும் வேதாகமப் பாடத்தை நிரப்பி வேலைத்திட்டத்தையும் முடிக்கவும்.
2. ரோமர் 3:23ஐயும் ரோமர் 6:23ஐயும் மனனம் செய்க.

கேள்விகள்:

வலுவுள்ள கிறிஸ்தவ வாழ்வு

கீழ்க்காணும் கேள்விகளை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்க. குறிப்பிட்ட வாசகத்திற்கு வேதாகமப் புத்தகத்தைப் புரட்டிக் கொள்ளவும் வாசகப் பகுதியை படித்தபின் குறிப்பிட்ட கேள்விக்கான பதிலை சுருக்கமாக உம் சொந்த வார்த்தைகளினால் எழுதவும்.

இறைவனின் ஆட்சித்தன்மையில் நம்பிக்கை

நம்பிக்கை எனும் சொல் நம்புவதில் விசுவாசிப்பதில் தங்கியுள்ளது. விசுவாசத்துடன் நம்ப வேண்டுமென்றும் அவர் ஊழியத்தில் நமது தேவைகளை அவர் நிறைவு செய்வார் என நம்புவோம். வலிமையற்றவர்களைக்கூட எவ்வாறு அவர் பயன்படுத்துகின்றார் என்பது உண்மையில் ஆச்சரியகரமானது.

1. கடவுளைப்பற்றிய உனது எண்ணம் அல்லது கருத்தானது நீ செய்யும் எல்லாவற்றிலும் தாக்கம் கொள்ளும். உன் எண்ணத்தில் கடவுள் என்பவர் யார் அவர்பால் உன் கடமைப்பாடு என்ன?

   ____

2. கீழ்க்காணும் வரிகளில் குறிப்பிட்ட வசனங்களையிட்டு உனது கருத்தை எழுதவும்.

   யாத் 4:10-12 ______________________________

   ____

   நீதிபதி 6:15,16 ______________________________

   ____

   எரே 1:6-9 ______________________________

   ____

   ஏசாயா 41:10 ______________________________

   ____

   1 கொரி 1:26-29 ______________________________

   ____

   பிலிப்பியர் 4:13 ______________________________

   ____

3. ''இறைவனின் வார்த்தையை பற்றிக் கொள்வதெப்படி'' என்ற படத்தை 10ம் பக்கத்தில் பார்க்கவும். அதிலிருந்து எவ்வகையான படிப்பினையை நீங்கள் பெறுவீர்கள்?

____

____

4. யோசுவா 1:8 வசனத்தை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதவும்.

____

____

5. ''இறைவனின் திருக்கரத்தை பற்றிக்கொள்வதெப்படி என்ற 11ம் பக்க படத்தை மீளாய்ந்து பார்த்து கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதிலெழுதவும்

(அ) இறைவனின் வல்லமையை இன்னும் அதிகமாய் எப்படி அனுபவிப்பீர்?

____

____

(ஆ) ஆவியில் நடந்து செல்லும் இரகசியம் யாது? (ஆவியில் நிறைவடைவது)

____

____

(இ) ஆவியில் நிறைவு பெறுவதன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதேன்?

____

____

முதலாம் பாடத்திட்டத்திற்கான செயற்திட்டம்

அன்பு எனும் ஆவியின் கனிக்கான வரைவிலக்கணம் கீழே தெளிவாக தரப்பபட்டுள்ளது. நாம் கிறிஸ்துவுக்காய் பகரும் சான்றானது நாம் எவ்வளவு தூரம் மற்றவர்களை அன்பு செலுத்துவதிலேயே தங்கியுள்ளது.

எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும் சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். 1 கொரி (13: 4–7)

1. அன்பின் குணவியல்புகளை மேற்கூறப்பட்ட வேத வசனத்திலிருந்து கோடிட்டு காட்டவும்.

அன்பின் இயல்பு

____________________ ____________________

____________________ ____________________

____________________ ____________________

2. அன்பின் பல்வேறு இயல்புகளை தியானித்து உமது வாழ்க்கையில் நீர் ஏனையோருடன் பழகுவதில் குறைவாகவோ, பெலவீனமாகவோவுள்ள அம்சங்களைக் குறிப்பிடுக.

நான் குறைவாகவுள்ள துறைகள்

____

____

____

3. பிறரைக் அதிக அளவு அன்பு செலுத்துவதில் நீர் செய்யக் கூடியவற்றை கீழே குறிப்பிடுக.

நான் இன்று எடுக்கக் கூடிய படிகள்

____

____

____

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு



பாடம் இரண்டு

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு

சில விசுவாசிகள் முதிர்ச்சியடைந்து சமநிலையடைந்தவர்களாயும், பலன் தரும் கிறிஸ்தவர்களாயும், மாறும் அதே வேளையில் ஏனையோர் தோல்வியும், விரக்தியும் அடைந்து பலனற்றவர்களாய் தம் வாழ்வின் பெரும்பகுதியைச் செலவளிக்கின்றனர் இது ஏன்? இப்பாடம் உங்களுக்கு இதற்கான பதிலைத் தரும்.

தேவன் நமது வாழ்விற்கான திட்டத்தையும், குறிக்கோளையும் வைத்துள்ளார். அவருடைய ''வழியில்'' நாம் கீழ்ப்படிந்து நடந்தால் வளமான, நிறைவான வாழ்வை இன்றே இங்கேயே அடைந்து அவர் பிரசன்னத்தினதும் வல்லமையினதும் மகிழ்ச்சியைக் காணலாம். எனினும் இது நாம் துன்பத்தைக் அனுபவிக்க மாட்டோம் என்று பொருள்படாது. பவுலும் சீலாவும் சிறையிலிடப்பட்டனர். எனினும் அச்சூழலிலும் அவர்கள் இறைவனுக்கு புகழ்ச்சியும், பாடலும் செலுத்தக்கூடியவர்களாயிருந்தனர். (அப் 16:25)

''இறைவனின் வழியில்'' நிலைகுலையாது நடப்பதென்பதும் அதனூடாக வெற்றிகரமான வாழ்வை வாழ்வோமென்பதும் நாம் தினந்தோறும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டுமென்பதை உணர்வதிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொரு விசுவாசிக்கும் இரு இயல்புகள் உள. புதிய இயல்பு (பரிசுத்த ஆவியினுல் இயேசு நம்மில் உறைவிடம் கொள்வது) நாம் இறைவனின் பாதையில் கீழ்ப்படிதலுடன் நடப்பதை விரும்பும். ஆனுல் நமது பழைய இயல்பு (மாம்சத்துக்குரியது) நம்மைத் திருப்திப் படுத்தும் எதிர்த்திசையில் இருக்கும். இதனுல் உட்போராட்டம் வழியில் ஏற்பட்டு, அப்போராட்டத்திற்கு நாம் ஆயத்தமாயில்லாவிட்டால் இறைவழியில் செல்லும் தோல்வியில் வீழ்ச்சியடையலாம்.

ஆனுல் இறைவன் கருணையும் இரக்கமுள்ளவர் எனவே அவர் தவறி செல்லும் கிறிஸ்தவர்களை மீண்டும் தம் வழியில் அழைத்திட ஏற்பாடொன்றினைச் செய்துள்ளார். நாம் நம்மையே ஆராய்ந்து குற்றங்களை உணர்ந்து அவற்றை அறிக்கையிட்டால் அவர் நம்மை மீண்டும் தம் வழியில் இழுத்துக் கொள்வார். அவ்வழியானது சமாதானம், மகிழ்ச்சி, வாழ்வின் நிறைவு ஆகியவை உள்ளடக்கியுள்ளதாகும்.

இறைவனின் வழியில் வெற்றிகரமாக நடப்பதென்பது எதிர்பாராதவாறே அல்லது தற்செயலாகவோ நடைபெறுவதல்ல. இயேசுவை நம் வாழ்வின் நாயகனுக ஏற்றுக் கொள்வதிலான அர்ப்பணத்திலேயே அது தங்கியுள்ளது. நமது அன்ருட அலுவல்களில் கட்டுப்பாடுடனும், முக்கியமானவைகளை நிறைவேற்றுவதிலும் கூட அது தங்கியுள்ள்படியால் சங்கீதத்தில்...

கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி என்னைப் போதித்தருளும்; நீரே என் ரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன். (சங்கீதம் 25: 4,5)

இப்படியாய் கூறப்பட்டுள்ளது.

கடவுளுடன் பத்தியுடன் தனிமையாய் செலவளிக்கும் நேரமே நமது அன்ருட வாழ்வின் மிக முக்கியமான நேரம். நமது 'உள் மனிதனுக்கு' போஷாக்கு

அளித்து, சரியான வழியில் நாம் நடக்கின்றோம் என்பதை உறுதிசெய்து, நம் தேவனுக்காய் அமர்ந்து காத்திருந்து கிறிஸ்துவுடனான உறைவை வலுப்படுத்துவதே நமது ''அமைதி நேரம்''

நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும், நான் அவனிலும், நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. (யோவான் 15:5)

துன்பங்களே நம் குணவியல்பைக் கட்டியெழுப்பும்

காலத்துக்குக் காலம் ஒவ்வொரு விசுவாசியும் எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிடும். உண்மையில் இறைவனின் மிக நெருங்கியவர்களாகியவர் கூட மிகவும் கொடுமையான துன்பங்களையும் சோதனைகளையும் தங்கள் வாழ்வில் சந்தித்துள்ளனர். புனித பவுலுக்கு உடலில் நோய் ஒன்றிருந்தது. (2 கொரி 12:7–10) பல முறை அடிபட்டும் சிறைப்பட்டும், கள்வர்களால் தாக்கப்படும்போதும் ஆபத்துகளுக்கு உட்பட்டும் வாடினார் (2 கொரி 11:23–27). யோபு தன் குடும்பத்தை இழந்தார், தம் எல்லா உடமைகளையும் இழந்தார், தலைமுதல் கால்வரை புண்களால் காணப்பட்டார். எனினும் அவர் நல்லவராகவும் தீமையை வெறுப்பவராகவும் இருந்தார் (யோபு 1:8). ஸ்தோவான் தன் விசுவாசத்திற்காக உயிரையே கொடுத்தார் (அப் 7:59).

நம்மைத் திருத்துவதற்காக இறைவன் அனுமதிக்கும் முறைகளாக துன்பங்களும் எதிர்ப்புகளும் அமையலாம் (சங் 119:67,71,75, எபி 12:6–10, 1 கொரி 11:31,32). பொதுவாகவே எதிர்ப்புகள் நம் கிறிஸ்தவ வளர்ச்சிக்கு உதவிடும் ஒரு அம்சமாகவே வாழ்வில் அமையும் (நீதி 25:4). இப்படியாய் நம்மை உயர்த்தி ஆழப்படுத்த இவை உதவும். மேலான பயனுள்ளவர்களாகவும், சிறப்பான குண இயல்பு கொண்டவர்களாகவும் நாம் மாற இவை படிக்கற்களாக மாறுகின்றன. ஆனால் நாம் தான் தவறாகப் புரிந்து கொண்டு சோர்வும் விரக்தியுமடைந்தவர்களாய் படிக்கல்லைத் தடைக்கல்லாய் காணுகின்றோம்.

வாசகத்தை மீளாய்வு செய், இறைவன் உங்களில் கிரியை செய்கிறார்.
(பிலி 2:13)

படிக்கல் அல்லது இடறுக்கட்டை

குணவியல்புகளும்
கிறிஸ்துவை ஒத்திருத்தலும்

கட்டியெழுப்புதல்

எதிர்ப்பு

யாக் 1:2,4
ரோமர் 5:3–5
ரோமர் 8:28,29
1 தெச 5:17,18

வாழ்வின் முழு நிறைவுக்காய் இறைவனின் வழியில் நடப்பது எப்படி?

இயேசு கிறிஸ்துவை நாம் நம் வாழ்வினுள் ஏற்றுக் கொள்கையில் இறைவனது எல்லா வாக்குறுதிகளும் நமக்கு சொந்தமாகின்றன. இவ்வாக்குறுதிகளை நாம் இறைவனின் தூண்டுதலின்படி நடக்கும் போது உணர்ந்து கொள்கின்றோம். நாம் எப்போதுமே முழுநிறைவுள்ளவர்களல்ல என்றபடியால் நாம் அவர் பாதையில் நடப்பதில் தவறி விட்டால் மீண்டும் எழுந்திட உதவித் திட்டமொன்றினையும் தந்துள்ளார்.

1. **கடவுளின் வாக்குறுதி:** *நிறைவும் மகிழ்ச்சியும்*

நம் வாழ்வின் நிறைவுக்கும், அர்த்தத்துக்குமான பாதையொன்று உள்ளது. இவ்வழியில் நடப்பவர்க்கு இறைவனின் வாக்குறுதிகள் அநேகம் இருப்பதை வேதாகமம் காட்டுகின்றது. அவற்றில் சிலவற்றை கீழே தருகிறோம்.



முழு நிறைவு: *சங் 16:11* — *''ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு''*

திருப்தி : *சங்கீதம் 107:9* — *''அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக''*

சமாதானம்: *ஏசாயா 26:3* — *''உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்''*

கடவுளின் வார்த்தை முழுநிறைவும், மகிழ்ச்சியும் தருமானால் ஏன் அநேக கிறிஸ்தவர்கள் விரக்தியும், வாழ்வில் வெறுமையும், துன்பமும் காண்கின்றனர்?

2. மனிதனின் பிரச்சினை: (பாவ சுயநல ஆசைகள்)

ஒரு கிறிஸ்தவன் கடவுளின் பாதையிலிருந்து பாவத்தால் இறைவனின் வழி தவறிப்போனால் அவனுக்கு விரக்தியும் தோல்வியும் மாத்திரமே மிஞ்சும். தகுந்த முறையில் கையாளப்படாவிட்டால் கடவுளிடமிருந்து தூரச் செல்பவனுக்கேற்படும் பிரச்சினைகளைக் கீழ்க்காணும் வேத வசனங்கள் காட்டுகின்றன.



பாவத்திலான நான்: *ரோமர் 7:18* ''அதெப்படியெனில் என்னிடத்தில் அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மை செய்யவேண்டுமென்கிற விருப்பமும் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை''.

இருதயத்துக்குள் கெடுதல்: *மாற்கு 7:21,22* ''மனுஷனுடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும் பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும்.''

தீய ஆசைகள்: *யாக் 1:13-15* ''சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக, தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்''.

எந்த சுயநலமிக்க ஆசை அல்லது பாவம் உங்களை இறைவனிடமிருந்து இழுத்துச் செல்கிறது? மீண்டும் கடவுளின் பாதையை நோக்கி திரும்புவது எப்படி?

3. **கடவுளின் தாராளமான கொடை:** *மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் வழிதவறிய நம்மை மீளவும் பழைய நிலைக்கு கொண்டு வந்திட இறைவன் ஒரு வழி வைத்துள்ளார் என்பதைக் கீழ்க்காணும் வேத வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. இதனால மீண்டும் கிறிஸ்துவுடனான நட்புறவு நமக்குக் கிடைக்கின்றது.*



கருணை: *புலம்பல் 3:22, 23 ''நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை, அவைகள் காலைத் தோறும் புதியவைகள்''*

அறிக்கை: *1 யோவான் 1:9 ''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்''*

கைவிடல்: *நீதிமொழி 28:13 ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனே இரக்கம் பெறுவான்''*

என் பாவத்தை தேவனிடம் அறிக்கை செய்தது எப்போது? மீளவும் இணைந்திட (குறிப்பாகச் சொல்லவும்)

1. **பாவ அறிக்கையிடு:** *ஆண்டவரிடம் உன் பாவங்களை அறிக்கையிடு பாவத்தை மன்னிப்பார் என்று விசுவாசி*

2. **கைவிடு:** *கடவுளின் பாதைக்குத் திரும்பு அவர் கிருபையால் கீழ்ப்படிதலுடன் நடந்து பரிசுத்த ஆவியினால் திடன்கொள்.*

என் வாழ்வில் பாவத்தை எப்படியாய் விட்டு விலகினேன்?

குறிப்பு: நம் மனதில் கடவுளுக்கோ மனிதனுக்கோ எதிராய் யாதொன்றும் வைத்திருக்கலாகாது என வேதாகமம் கூறுகிறது. **நீங்கள் யாருக்காவது துன்பம் விளைவித்ததுண்டானால், அம் மனிதருடன், முதலில் சமாதானம் செய்து கொண்ட பின் இறைவனுடன் உங்கள் உறவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

இப்போது அறிக்கையிட்டு பாவத்தைக் கைவிட்டபின் கடவுளின் பாதையில் நிலைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?

4. **மனிதனின் வழக்கம்:** *முன்பு தீர்மானிக்கப்பட்ட வழி* கடவுளின் பாதையில் நிலைக்க ஒரு கிறிஸ்தவனுவன் இயேசுவின் முன்மாதிரியை (லூக் 4: 1-14) பின் பற்றல் வேண்டும். அவர் சாத்தானை எதிர் கொண்ட போது பரிசுத்த ஆவியால் நிறைவு பெற்றவராக, வேத வசனத்தை ஆயுதமாகப் பயன்படுத்தினுர். வேத புத்தகமே அவருக்கு வழிகாட்டியாக இருந்தது. கடவுளின் பாதையில் நீங்களும் நடந்திட கீழ்க்காணும் வசனங்களும், ஆலோசனைகளும் உங்களுக்கு உதவும்.



மனதை நிலைகொள்ள: *தானியேல் 1:8* ''தானியேல் ராஜாவின் போஜனத்தினுலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினுலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு தன்னைத் தீட்டுப்படுத்தாத படி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்''

தெரிவு செய்யப்பட்ட பாதை: *சங்கீதம் 119:30* ''மெய் வழியை நான் தெரிந்து கொண்டு உம்முடைய நியாயங்களை எனக்கு முன்பாக நிறுத்தினேன்''

புனர் வாழ்வு: *ரோமர் 12:2* ''நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறிய தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினுலே மறுரூபமாகுங்கள்''

நேர்வழியில் சென்றிட:

1. ஜெபத்திலும், வேத பாடத்திலும், ஊடாக கிறிஸ்துவுடன் நட்புறவுக்கான நேரம் ஒன்றினை அனுதினமும் குறித்துவைத்துக்கொள்.
2. உன் தனிப்பட்ட ஆன்மீகத் தேவைகள் என்ன என்பதைக் தேடிக்கண்டு பிடி (உன் பெலவீனம் எங்கேயுள்ளது?)
3. நீ செய்ய வேண்டிய செயல்களைக் குறித்த வசனங்களைத் தெரிவு செய்.

4. அவ்வசனங்களை மனப்பாடம் செய்து தினசரி தியானி. அப்போது அதன் படி நடக்க உற்சாகமும் ஏற்பட்டு அவ்வழியே நடந்து உன்னைத் திருத்திக் கொள்வாய்.

5. பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதல்களுக்குக் கீழ்படிய ஆயத்தமாயிரு.

6. கிறிஸ்தவ ஐக்கியத்துடன் கூடிய குழுவொன்றுடன் நெருக்கமான தொடர்பு கொள். அங்கே உன் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்.

முன்னுரிமைகள்

இயேசு கிறிஸ்து நம் வாழ்வின் மத்தியில் வீற்றிருந்து, நம் வலிமையான வாழ்விற்கான உற்சாகமான சக்தியைத் தருகின்றார். அவரை வேதாகம வாசிப்பின் மூலமும், ஜெபத்தின் மூலமும் சந்திக்கும்போது அவர் நமக்கு வாழ்வின் திசையை, ஞானத்தை, வல்லமையை, அறிவை, சமாதானத்தை, மகிழ்ச்சியைத் தருகின்றார். நம் வாழ்விற்கு அவசியமான அனைத்தையும் தந்து நம்மை போஷிக்கின்றார், அவரில் நிலைத்திருக்கும் இவ்வுறவானது நம் வாழ்வினை நிறைவு செய்து நம் அயலாருக்கும், திருச்சபையாருக்கும் உலகிற்கும் பொங்கி வரக்கூடிய அருளைத் தருகின்றது.

இரண்டாம் பாடத்திற்கான வீட்டு வேலை

1. கீழ்க்காணும் வேதபாடத்தையும் வேலைத்திட்டத்தையும் நிறைவு செய்.
2. ரோமர் 5:8, எபே 2:8,9 ஆகியவற்றை மனப்பாடம் செய்.

கேள்விகள்

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வு

கடவுளின் பாதையில் நடந்து வாழ்வின் முழுநிறை செய்வது எப்படி ?'' என்ற புத்தகத்தின் முதல் 4 பக்கங்களை வாசித்தபின் கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதில் சொல்லவும்.

1. ''கடவுளின் பாதையில்'' நடப்பதாலான பெறுபேறுகள் யாவை ? பக்கம் 19

2. வேதவசனங்களையும் வரைப்படத்தையும் மீளவும் பார்த்து 20ம் பக்கம் உங்கள் பிரச்சினையை விளக்கவும்.

3. வேத வசனங்களையும், வரைப்படத்தையும் பார்த்து 21ம் பக்க கடவுளின் திட்டத்தை விளக்கவும்.

4. கடவுளின் பாதையில் நிலைகொள்வதும், நடப்பதும் எப்படி ? 22ம் பக்கம்

5. சக்கர வரைப்படம் காட்டுவதென்ன ? 23ம் பக்கம்

6. சக்கரத்தில் எப்பகுதி (சுற்றுவட்டமா நடுப்பகுதியா) முக்கியமானது? ஏன்?

7. இயேசு கிறிஸ்து உங்கள் ஆண்டவர் என்பதையும் அவரை நீங்கள் அன்பு செய்கின்றீர்கள் என்பதையும் எடுத்துக்காட்டுவதெப்படி ? (லூக் 6:46 யோவான் 14:21)

இரண்டாம் பாடத்திற்கான செயற்திட்டம்

தினசரி அமைதியான நேரத்தை ஒதுக்குவதன் மூலமாக

சரியான வழியில் நடக்கவும், இயேசுகிறிஸ்துவை உங்கள் வாழ்க்கையின் நடுவிலே வைத்துக் கொள்ளவும் உங்கள் அனுபவத்தைச் சிறப்பாகவும் ஒளிமயமானதாகவும் வைத்துக் கொள்ளவும் முடியும். அடுத்த ஒரு வாரத்திற்கு தினசரி 15 நிமிடங்களை ஆண்டவருடன் செலவிட ஒதுக்குங்கள்.

1. வழமையான நேரமென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். அது ஆண்டவருடனான நட்புறவின் நேரம்.
   * 5 நிமிடம் வேதத்தை மீளவும் ஆராய்ந்து பார்க்கவும் (''கடவுளின் பாதையில் நடப்பது பக்கம் 19-22)
   * 5 நிமிடம் எபேசியர் நிருபத்தை (நாளொன்றுக்கு ஒரு அதிகாரமாக) வாசிக்கவும். முக்கிய கருத்துக்களையும் வசனங்களையும் கீழ்க் கோடிடுங்கள்.
   * 5 நிமிடம் தினசரி ஜெபிக்கவும்.

2. உங்கள் ஆன்மீக தேவையுள்ள ஒரு பகுதியை உங்கள் வாழ்வில் கண்டுபிடியுங்கள். அங்கே நீங்கள் பெலவீனமானவர்கள்? நேர்மையின்மை, காமம், பொறுமையின்மை, கோபம், நாவு, கெட்ட காட்சிகள் முதலியன?

3. கடவுள் வழிநடத்தும் வழிமுறையொன்றை விளக்கும் வேத வசனம் ஒன்றைத் தெரிவு செய்க. கொலோ 4:6

4. அதனை மனப்பாடம் செய்து, தினசரி தியானித்தால் திருந்துதலும், வழிநடத்துதலும் கிடைக்க வழி வகுக்கும். சங்கீதம் கூறுகிறது, ''என் வழிகளைச் சிந்தித்துக்கொண்டு என் கால்களை உம்முடைய சாட்சிகளுக்கு நேராகத் திருப்பினேன், உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும் படி நான் தாமதியாமல் தீவிரித்தேன்'' (சங் 119:59,60)

5. பரிசுத்த ஆவியின் தூண்டுதலுக்குச் செவிமடுக்கக் கூடியவனாயிரு ''ஆவியில் நடந்து செல்வது'' எப்படி என பயிற்சி செய். ''மனிதனுடைய வாழ்வானது அவனது சிந்தனையினாலேயே உருவாக்கப்படுகிறது'' -மார்க்கஸ் ஆரேலியாஸ்

விதை		அறுவடை
ஒரு சிந்தனை	....	ஒரு செயல்
ஒரு செயல்	....	ஒரு பழக்கம்
ஒரு பழக்கம்	....	ஒரு குணவியல்பு
ஒரு குணவியல்பு	....	ஒரு சேருமிடம்

நீ என்ன சிந்திக்கிறாய் என்பதில் கவனமாயிரு. உன் சிந்தனையின் ஆக்கிரமிப்பே உடன் செய்யும் செயலாயிருக்கும்.

உதாரணம்: (நாவு கொலோ 4:6)

நடைமுறைக்கான சிந்தனை — ''என் சொந்த வழியில் நான் சிந்திக்கத் தியானத்தினாலும், அதன் நடைமுறையினாலும் கடவுளின் பக்கம் திரும்புவேன்''

''அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவுசொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும் படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக'' (கொலோ 4:6)

கிறிஸ்தவ சாட்சி



பாடம் மூன்று

கிறிஸ்தவனின் சாட்சி

இது வரை நாம் இறைவனேடுகூட நடப்பதற்கான தனிப்பட்டவருக்கான ஆயத்தத்தை வலியுறுத்தி வந்தோம். இப்போது சில கேள்விகளைக் கேட்டுப் பார்ப்போம்.

* தேவனுடைய வல்லமையிலும், ஆட்சித் தன்மையிலும் உனக்கு நம்பிக்கை உண்டா ?

* உனது பெலவீனத்தோடும் இயலாமையோடும் அவர் உன்னைப் பயன்படுத்துவார் என நீ நம்புகின்ருயா ?

* உன்னைப் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துவார் என்றும் உன்னை அவர் தைரியப்படுத்தி உன் பணியில் உனக்கு அவர் உறுதுணையாய் நின்று நீ ஆதாயப்படுத்தப்போகும் ஆத்துமாக்களிலும் கூட வல்லமையாய் செயற்படுவார் என நம்புகின்ருயா ?

''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது''. (எபிரேயர் 4:12)

நீ நம்புகிருயா ?

''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனே அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனுயிருக்கிறது'' (ரோமர் 1:16) என்பதை நீ நம்புகின்ருயா ?
(அதாவது யுத்தம் உன்னுடையதல்ல, கடவுளுடையதே'' 2 நாளா 20:15)

இவற்றிற்கு உனது பதில் ''ஆம்'' என்றிருந்தால் சாட்சி பகர்வது உனக்கு இலகுவாயிருக்கும். நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய சிலவற்றை கீழே தருகின்ருேம்.

முதலாவது — ''உன் சொந்த வாழ்க்கை'' உனது சாட்சியத்தில் பெரும் பங்கை வகிக்கின்றது என்பதை மறந்து விடாதீர். கடவுள் உன்னைப் பயன்படுத்த நீர் முழுமையாய் பரிசுத்தமானவராக இருக்க வேண்டுமென்பதில்லை. நீர் அவ்வாருன முதிர்ச்சி அடையுமுன்னரே அவர் உன்னைப் பயன்படுத்தலாம். எனினும் உமது வாழ்வானது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிற்கு நற்சான்று பகர வேண்டும் (2 கொரி 3:2,3; 4:2). ஒரு தூய்மையான வாழ்வினூடாகப் பரிசுத்த ஆவியானவரால் திறம்பட இயங்க முடியும்.

இரண்டாவது — ஏனையோருக்குச் செவிமடுத்தலினுல்தான் உங்களை ஏனையோர் கேட்கச் செய்ய முடியும். இயேசு பாவிகளின் நண்பராய் அவர்களோடு அமர்ந்தார். (லூக்கா 15: 1,2). உமது வார்த்தைகளின் வழியாகப் பேச்சு வன்மையால் சாட்சி பகர்வதை உமது உள்ளம் நாடலாம். ஆனுல் அம்மக்களின் நன்மதிப்பைப் பெறுவது அவர்கள் மீது நீங்கள் கொள்ளும் கரிசனையாலேயே. அவரவர் தம், தம் பிரச்சினைகளைக் கூறட்டும். அவர்களது மிக அவசரமான முக்கிய தேவை என்னவென்பதைக் கேட்டறியவும். வெறுமனே அவரவர் பிரச்சினைக்குச் செவிமடுத்தாலே மட்டும் போதும். பல இதயங்களின் கதவுகள் திறக்கப்படும். அதனுல் அவரவர் பிரச்சினைகளில் நீர் அதிகமாக ஈடுபட நேரிடலாம். நீண்டகால நோக்கில் உமக்கொரு அனுதாபம் கொள்ளக்கூடிய நண்பரைச் சம்பாதிக்கும் வாய்ப்பு இவ்வாறு உமக்குக் கிட்டும்.

மூன்றாவதாக: சாட்சி பகர்வதென்பது, நீங்கள் ஒரு கணித வாய்ப்பாட்டின்படியோ, செயல் முறைத் திட்டத்தின் படியோ இரட்சிப்பைப் பெற்றுத் தர கூடிய வழிமுறையல்ல. மாறாக இயேசுக் கிறிஸ்து எனும் ஒரு நபரை அவருக்குக் கொடுக்கின்றீர். கிறிஸ்துவைப் பகிர்ந்து கொள்ளும் போது பரிசுத்த வேதாகமத்தைப் பாவிக்கும் தன்நம்பிக்கையை நீர் படித்த வேத வாசகங்கள் தரும். எனினும் எப்போதுமே வேத வாக்கியத்தோடு ஆரம்பித்திடலாம் என்று நினைத்துத் தவறிழைத்துவிடாதீர். வேத வசனங்களை எடுத்துக் கூறி, பகுதி பகுதியாக எடுத்துக்காட்டி, எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலாது. தனி மனிதருடைய தேவை, உணர்வுகளை இனம் காண்பதில் விரைவாய்ச் செயல்பட வேண்டும். வேதவசனத்தையும் அவ்வாறே பொருத்தமாகப் பயன்படுத்தவும்.

நான்காவதாக: நாம் அனைவரும் பாவிகள் என்பதை விட இறைவனின் அன்பே பிரதானமானது என்பதை வலியுறுத்திப் பேசவும். நாம் அனைவரும் பாவிகள் என்பதால் நமக்கொரு இரட்சகர் அவசியமென்பதை நாம் ஏற்றுக் கொள்ளும் அதேவேளையில், நமது உரையாடலில் அதனைப் பின்னர் தான் கொண்டு வரவேண்டும்.

ஐந்தாவதாக: அதனை எளிமையாக வைத்துக்கொள்ளவும். ''சகோதரரே நான் உங்களிடத்தில் வந்த போது தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவித்தவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்'' அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்'' (1 கொரி 2:1, 2) என்று அப்போஸ்தலாகிய பவுல் கூறுகிறார்.

மக்களில் உம் வார்த்தைகள் பதியவேண்டுமென்பதற்காக நீர் மிகவும் புத்திசாலித்தனமான அல்லது தத்துவ முறையில் விவாதிக்க வேண்டுமென்பதில்லை. அப்போஸ்லராகிய பவுல் மக்கள் தடம் மாறிச் செல்ல அனுமதிக்கவில்லை. நற்செய்தியின் எளிமையைக் கைவிடாமல் நிறையப் பலனைக் கண்டார். (1 கொரி 1: 22-24)

உயரிய சத்தியத்தையும் அதன் பூரணத்துவத்தைத் தேடும் மதவாதக் குழுக்களுக்கு ''அதற்கு, யேசு நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14:6) வசனத்தையே பதிலாகக் கொடுக்கவும்.

இன்னும் அதிகமான வெளிப்பாட்டைக் கேட்பவர்களுக்கு ''அவருக்குள் வாசமாயிருக்கிறது'' (கொலோ 2:10) காட்டவும்.

மனிதக் கிரியைகளினால் செயல்களினால் செய்ய முடியுமென்பவர்களுக்குக் ''கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல'' (எபே 2:8,9) என்ற வசனத்தை காட்டவும்.

கடைசியாக ஆராய்ச்சியின் பலனாக ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதுதான் நமக்கு இரட்சிப்பைத் தருமென்பதையும், மனித தர்க்கசாஸ்திரங்கள் அதனைத் தராதென்றும் அறிந்து கொள்ளுங்கள்.

4. சாட்சியின் முறைகள்

1. வசன முறை

2. துண்டுப் பிரசுர முறை
''இறைவனை அறிவது'' என்ற பிரசுரத்தின் மூலம் இன்னொருவருடன் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்வது சுலபம். இப்பிரசுரம் நற்செய்தியின் சுருக்கமாகவே அமைந்துள்ளது. அச்சிடப்பட்ட அப்பிரசுரமோ வேறொன்றோ நாம் திசை மாறாமலிருக்கச் செய்கிறது. அனாவசியப் பேச்சுகளில்லாமல் நம் குறிக்கோளை அடைய அது உதவுகிறது. அத்தோடு நற்செய்தியின் சுருக்கத்தை நாம் பகிர்ந்து கொள்கின்றோம்.

3. வாழ்விற்கான பாலம்

4. உங்கள் சொந்த சாட்சியம் — உங்கள் சாட்சியத்தை கீழே எழுதுமாறு கேட்கப்படுகிறீர்கள். மேற் கூறப்பட்ட மூன்று முறைகளுடன் உங்கள் சாட்சியமும் சேரும்போது, அது மிகவும் உதவியாக இருக்கும். நற்செய்தியின் வல்லமையின் உயிருள்ள உருவாக நீங்கள் இருக்க உங்கள் மீட்பு அவ்வல்லமையை வெளிப்படுத்தும்.

உங்கள் சாட்சி

150 – 200 சொற்களில் சற்று யோசனையுடன் எழுதுக. கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதில் கூற முடியுமானால் அச்சாட்சியை இலகுவாக எழுத முடியும்.

1. கிறிஸ்துவுக்காய் உம்மை நீர் அர்ப்பணித்து ஒப்புக்கொடுத்தது எப்போது ?

2. உங்களுக்கு நற்செய்தியை பகிர்ந்தவர் யார் ?

3. மீட்பின் பின்னர் உங்களுக்கேற்பட்ட மாறுதல் என்ன ?

4. உமக்கு நற்செய்தியை பகிர்ந்திட அவர் கையாண்ட வழி என்ன ?

5. உங்கள் வாழ்வில் இன்று நீங்கள் காணும் மாறுதல் என்ன ?

மனப்பாடம் செய்வது எப்படி

அ) வழக்கமாக எடுத்தாள்வதன் மூலமாக
1. தலைப்பு 2. வாசகக் குறிப்பு 3. வாசகம் 4. தலைப்பு

வாசகக்குறிப்பை வாசகத்தை விட நினைவில் வைத்திருப்பது கடினம். ஆகவேதான் அதை வாசகத்தின் முன்னேயும் பின்னேயும் திரும்பத்திரும்ப குறிப்பிட வேண்டும். ஒரு சூட்கேஸ் பெட்டியின் கைப்பிடியைப் போன்றதுதான் வாசகக் குறிப்பு. உங்களுக்கு அந்த குறிப்பிட்ட வாசகத்தை தேவைப்படுகையில் பைபிளினின்று அப்படியே தூக்கி எடுத்தாள அது உதவும். அட்டைகளின் பின்னே அக்குறிப்புகள் இருக்குமாகையால் உங்களுக்கு வாசகத்தை மீளவும் பார்க்க உதவியாயிருக்கும்.

ஆ) வேதவசன மனப்பாடத்தின் இரகசியமானது மீண்டும், மீண்டும், மீண்டும் ஆராய்வதிலேயே இருக்கிறது. ''பாவிக்காத பொருள் தொலைந்து போனாலும் ஆச்சரியமில்லை'' என்பார்கள். ஒரு தொலைபேசி இலக்கத்தை நினைவில் வைத்திருப்பது எப்படி ?
அடிக்கடி அந்த எண்ணைச் சுழற்றுவதன் மூலம் தான்.
எனவே மீண்டும், மீண்டும், மீண்டும் ஆராய்ந்து பார்.

இ) வாய்விட்டு வசனத்தைச் சொல், வசனத்தை வைத்து ஜெபி, தேவன் அவ்வசனத்தின் பொருளை உனக்குத் தெளிவாக்கவும் உன் வாழ்வின் நடைமுறைக்கு அது எவ்வாறு உதவும் என நீ அறிந்திடவும் கேள். ஒரு சமயத்தில் ஒரு வசனத்தின் பகுதியையே குறிப்புடன் சேர்த்து மனப்பாடம் செய், கொஞ்சம் கொஞ்சமாக முழு வசனத்தையும் படித்து விடலாம்.

அவரை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும் ''அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொள்பவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.'' (யோவான் 1:12)	**கிறிஸ்துவே எமது இரட்சகர்** ''என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறமும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்'' (யோவான் 10:9)
மீட்பு ஒரு இலவச கொடை ''கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.'' (எபே 2:8,9)	**கிறிஸ்து தண்டனையைச் செலுத்தி விட்டார்** ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.'' (ரோமர் 5:8)
பாவத்திற்கு தண்டனையுண்டு ''பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்'' (ரோமர் 6:23)	**மனிதன் பாவமுள்ளவன்** ''எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமை யற்றவர்களாகி இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.'' (ரோமர் 3:23)

வழிகாட்டுதலில் சிக்கல்களுக்கான உதவிகள்

துன்பம்	சங் 119:67, 71, 75 சங் 34:19
ஏக்கம்	பிலி 4:6,7 1 பேதுரு 5:7
உத்தரவாதம்	யோவா 3:16 1 யோவா 5:11-13
வசதி	சங் 23 எபி 13:5, 6
தைரியமிழப்பு	கலா 6:9 ஏசா 41:10
வெறுமை	சங் 107:8,9 சங் 37:4,5
மன்னிப்பு	சங் 32:5 1 யோவா 1:9
குற்றப்பழி	ரோமர் 8:1 ஏசாயா 1:18
நியாயத்தீர்ப்பு	ரோமர் 14:12 எபி 9:27
தனிமை	எபி 13:5, 6 சங் 16:11
வேதனை	எபி 12:6-11 1 பேதுரு 1:6, 7 1 பேதுரு 2:19-23 2 கொரி 12:9, 10
சோதனை	மத் 26:41 யாக் 1:13, 14
வெற்றி	பிலி 4:13 1 யோவா 4:4 1 கொரி 10:13
கவலை	பிலி 4:19 ரோமர் 4:20, 21 1 யோவா 5:14, 15

மறுப்புகளும், சாட்டுகளும்

நான் மிக மோசமானவன்	எபி 7:25 ஏசா 1:18
நான் நிறைய விட்டுவிட வேண்டும்	மாற் 8:36 1 யோவா 2:15-17
என்னால் தாக்குப்பிடிக்க முடியாது	1 பேது 1:5 பிலி 1:6
பிறர் என்ன நினைப்பார்கள் என பயம்	மத் 10:32, 33
இப்போது வேண்டாம் பின்னர் பார்ப்போம்	நீதிமொழி 27:1 2 கொரி 6:2
என்னால் முடிந்தவற்றைச் செய்கிறேன்	எபே 2:8, 9 ஏசா 64:6
நான் எவ்வளவு மோசமானவன்	யாக் 2:10 ஏசா 53:6
கடவுள் எவரையும் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக்கமாட்டார்	யோவா 3:18, 36 எபி 9:27
என்னைக் கடவுள் ஏற்றுக்கொள்வாரென்று எனக்கு தெரிவதெப்படி	யோவா 6:37 2 பேதுரு 3:9
எனக்கு வேதாகமம் விளங்காது	1 கொரி 2:14 2 கொரி 5:7
கிறிஸ்து ஒருவரே வழி என நான் அறிவதெப்படி	யோவா 14:6 அப் 4:12
என் கேளிக்கைகளே எனக்கு இன்று தேவை	பிரசங்கி 11:9 1 கொரி 6:2
கிறிஸ்துவைப் பின்செல்வது மிகக் கடினமானது	மாற்கு 8:36 லூக்கா 18:29, 30
இயேசு தேவனல்லர்	எபி 1:3 யோவா 10:30
இது பொருத்தமற்றவை	ஏசா 55:8, 9 1 கொரி 1:18, 23
இது எனக்கு	எபி 10:31 லூக் 12:16-21
நான் இயேசுவில் நம்பிக்கையற்றவன்	ரோமர் 3:3 அப் 4:12

பாடம் 3 வீட்டு வேலை

1. கீழ்க்காணும் வேதாகம பாடத்தையும் வேலைத்திட்டத்தையும் பூர்த்தி செய்யவும்
2. யோவான் 10:9, யோவான் 1:12 மனப்பாடம் செய்

கேள்விகள்:

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி

1. நற்செய்தி என்பது என்ன? 1 கொரி 15: 1-4

____

____

____

2. நற்செய்தியில் காணப்படும் வல்லமை என்ன? ரோமர் 1:16

____

____

____

3. மனிதனின் அடிப்படையான ஆன்மீக பிரச்சினை யாது? (மனிதன் ஏன் மீட்படைய வேண்டும்)? ரோமர் 3:23; ரோமர் 6:23

____

____

4. கடவுளின் தீர்ப்பு என்ன? (பாவிகளை மீட்க இயேசு என்ன செய்தார்?) ரோமர் 5:8 1 பேதுரு 2:24

____

____

5. மனிதன் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்? (ஒருவன் கிறிஸ்தவனாவது எப்படி? கடவுளின் பிள்ளையாவது எப்படி?) அப் 3:19; யோவான் 1:12

6. கீழ்க்காணும் வேத பகுதியினூடாக மறுபடியும் பிறப்பது எப்படி என்று விளக்குக. யோவான் 3:16

____

____

7. சமாரியப் பெண்ணுடனும், நிக்கதேமுவுடனும் இயேசுவின் சாட்சி பகர்தலின் அணுகு முறை மாறுபட்டதாயிருந்தது எவ்வாறு? யோவான் 3: 1–8; யோவான் 4: 1–15

____

____

8. அப்போஸ்தலர் 8: 25–39 பகுதியை வாசிக்கவும். பிலிப்பு எவ்வாறு சான்று பகர்ந்தார் என ஆராய்ந்து பார்க்கவும். சாட்சி பகர்வதில் நீ படிக்கும் நடைமுறைப் பாடம் எவை?

அவற்றில் மூன்றைக் குறிப்பிடுங்கள்

____

____

____

செயல்திட்டம்

1. ''இறைவனை அறிவது'' என்ற பகுதியைப் பகிர்ந்திடக் கூடிய இருவருக்காக ஜெபம் செய்.

அவர்களோடு சந்திப்பதற்கான ஏற்பாடு ஒன்றினைக் ''கிறிஸ்தவ வாழ்வும் சாட்சியும்'' வகுப்பில் நீ கற்றுக் கொண்டதைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென அவர்களுக்குக் கூறு.

பகிர்ந்து கொள்ளும் முன் அவர்களது சிந்தனையைக் கவர்ந்திடப் ''பில்லி கிரேஹம்'' அவர்களின் புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்தினை அறிய விரும்புகிறேன் என்று சொல்.

அவர்களோடு பகிர்ந்திடும் போது அவர்கள் ஆண்டவரை அறியாதோரிருந்தால் இறைவன் தாமே அவர்கள் கண்களைத் திறந்திட ஜெபி.

பின் தொடர்பு

பாடம் நான்கு

பின்தொடர்பு

நாம் எதிர்பார்க்கும் முன்னே வழிகாட்டுதலுக்கான வாய்ப்புக்கள் நம்மிடம் வரத் தொடங்கும். விசுவாசமான நற்செய்தி அறிவிப்பின் மூலம் எண்ணற்ற மக்களை இயேசுவின் புதுவாழ்விற்கு கொண்டு வர இயலும். இதன் பின்னர் இவர்களுக்கு என்ன நேரிடும்? அவர்கள் விசுவாசத்தைக் காப்பார்களா? திருச்சபையில் தம் இடத்தை வகிப்பார்களா? வலுவுள்ள கிறிஸ்துவின் சாட்சிகளாக வளருவார்களா? விதைப்பவன் உவமை (மாற்கு 4)ன் மூலமாக தமக்கு எதிர்பாராத தோல்விகளும் ஏற்படும் என்பதை நாம் உணர வேண்டும். எனினும் நிலைத்திருக்கும், வெற்றியும் கூட நமக்குக் கிடைக்கும். எழுப்புதல் கூட்டங்களின் வருடாவருட அனுபவங்கள் இதையே நமக்குக் காட்டுகின்றன.

இன்னொரு வழியில் கூறுவதென்றால் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் ஒரு ஆரம்பம் மட்டுமே. அவர்களுக்கு தனிப்பட்ட கவனமும், ஜெபமும் நாம் கொடுப்பதன் மூலம் அவர்களது ஆன்மீக வளர்ச்சியும் செயலாற்றமும் அமைந்திருக்கின்றது. அப்படியான வழிநடத்தும் பல மடல்களையே புதிய ஏற்பாட்டில் பவுல் அப்போஸ்தலரும் எழுதியிருக்கின்றார். தனிப்பட்டோரையோ, சபையையோ பின் தொடர்பு கொள்ளவே அக்கடிதங்களை அவர் எழுதியதாகக்கான வேண்டும்.

ஒரு புதிய கிறிஸ்தவன் திருச்சபையில் ஒன்றிணைக்கப்பட்டபின் அவன் தனக்குரித்தான இடத்தை வகித்து சேவையில் தரித்திருந்து, சபையின் வளர்ச்சிக்கு உதவ முன் வரும் காலம் வரை அவனுக்கு நாம் அளிக்கும் கவனத்தையே பின் தொடர்பு என நாம் கூறுகின்றோம். பவுல் இதன் நடைமுறைகளை வகுக்கின்றார். அவர் காலத்தில் அவருக்கு பிரயோசனமாயிருந்த உத்திகளும், நடைமுறைகளும் நமக்கு இன்று உதவும்.

புதிய கிறிஸ்தவர்கள் மீது பவுல் காட்டிய அக்கறையும் அன்பும் மிக முக்கியமானது. அவர்களுடைய வாழ்க்கையில் தன்னைப்பிணைத்துக்கொள்ள அவர் ஆயத்தமாயிருந்தார். அதற்காக அவர் பெரும் விலையும் கொடுக்க வேண்டியதாயிற்று ''தேவனுடைய சுவிஷேசத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களான படியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்'' (1 தெச 2:8) புதிய கிறிஸ்தவர்களுக்காக நாம் நமது நேரத்தையும் நம்மையும் கொடுக்கத் தயங்குவதே நற்செய்தி அறிவிப்பிற்கான மாபெரும் தடைக்கல். அவர்களுடன் நாம் கலக்கவும் அவர்களை உயிருட்டமான நிலையில் நிலைக்கச் செய்யவும் வேண்டும். பவுலுக்கு புதிய கிறிஸ்தவன் மீது ஆழ்ந்த கவனமும் கரிசனையும் இருந்தது. ''நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன். ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வாஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்'' (2 கொரி 11:2, 3)

அவர்களது வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் அவர் கவனமாயிருந்தார். அவர்கள் முதிர்ச்சியடைய வேண்டுமென்பதே அவரது குறிக்கோள். ''என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக கர்ப்பவேதனைப்படுகிறேன்'' (கலா 4:19)

''எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்''
(கொலோ 1:28)

அன்பைப் பொழிந்து திருச்சபைகளுடனும், தனிநபர்களுடனும் தம் கடிதங்களின் மூலமாக தொடர்பு கொண்டிருந்தார். ''நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்களைச் சோதித்தறியும் படி இப்படி எழுதினேன்''. (2 கொரி 2:9)

பவுலின் கடிதங்கள் அவரது உள்ளத்தின் ஆசைகளை வெளிப்படுத்துகின்றன. மக்களுக்காக அவர்கள் தேவைகளில் தானும் பணிவிடை செய்ய வேண்டும் என்பதே அவ்வாசையாகும் அவர்கள் வளர்ச்சிக்காக அடிக்கடி வெகுநேரம் அவர் ஜெபிப்பார். ''உங்கள் முகத்தைக் கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும் பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோம்'' (1 தெச 3:10)

தாம் போக இயலாத இடங்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்ட மனிதரை அனுப்பினார். ''ஆகையால் நாங்கள் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், அத்தேனே பட்டணத்தில் தனித்துவிடப்படுகிறது நன்மையென்று நினைத்து, இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப்பற்றி உங்களுக்குப் புத்திசொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிஷேசத்தில் எங்கள் உடன் வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனிப்பினோம். இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே,'' (1 தெச 3 : 1 — 3)

அவருடைய வெற்றியின் மாபெரும் இரகசியமானது என்னவென்றால் தனிப்பட்ட முறையில் தனி நபர்களையும் சபைகளையும் சந்திக்கத் திரும்பினார். படிப்பித்துக்கொடுத்தார்.

(அ) அவரது முதலாவது நற்செய்திப் பயணம் பர்னபாவுடன் சேர்ந்து அந்தியோக்கியாவிலிருந்து ஆரம்பித்தது. ''அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களை பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்'' (அப்போஸ்தலர் 13 : 2, 3)

(ஆ) இரண்டாவது பெரும் பயணத்தின் முக்கிய குறிக்கோள் பின்தொடர்ந்து கவனித்தலே ''சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டனங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும் என்றான்'' (அப்போஸ்தலர் 15 : 36)

(இ) மூன்றாவது பயணமும் அதற்காகவே ''அங்கே சில காலம் சஞ்சரித்த பின்பு புறப்பட்டு கிரமமாய்க் கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான்'' (அப்போஸ்தலர் 18:23)

இங்கே முன்னுரிமை தெளிவாக்கப்பட்டுள்ளது. புதிய கிறிஸ்தவர்களுக்கு பல்வேறு தேவைகள் உள. அவற்றை யாரேனும் கவனிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் உதவுகின்றார். வேதாகமம் வளர்ச்சிக்கான உணவளிக்கின்றது. எவர் அந்தக் கிறிஸ்தவனை ஆண்டவரிடம் கொண்டு வந்தாரோ அவர் அவரோடு இணைந்து செயற்படவேண்டும். அப்போது அவன் உணவு பெற்றுக்கொண்டவனாய் செயலாற்றமுள்ள கிறிஸ்தவனாய் மாறுவான்.

ஒரு புதிய கிறிஸ்தவனின் தேவைகள்

உணவளித்தல் — 1 பேதுரு 2 : 2

கிறிஸ்துவில் வளர்ச்சியடைய உதவிட ஒரு புதிய கிறிஸ்தவனானவன் ''கிறிஸ்துவைப் பின்செல்லல்'' என்ற சிறு நூலை பயன்படுத்தலாம். அல்லது அதுபோன்றதொரு வேறு சாதனத்தையும் கையாளலாம். இந்நூலை விசாரணையாளருடன் கூட வாசிக்கச் செய்யலாம். அல்லது விசாரணையாளரே தாமாக அதனை வாசிக்கலாம். ஆனால் அதனைச் சற்றுப் பக்குவமடைந்த கிறிஸ்தவரோடு வாசிப்பதே மிக உசிதம். அத்தோடு அதில் மேற்கோள் காட்டப்படும் வேதாகம வசனங்களை புனித வேதாகமத்திலிருந்துதானே வாசித்திடல் வேண்டும். புதிய கிறிஸ்தவர் இப்புத்தக வாசிபுப்னூடே எழுப்பக்கூடிய கேள்விகளுக்கு பக்குவமடைந்தவர் பதிலளித்தாலே சிறப்பாயிருக்கும். இப்புத்தக 10 பாடப் பகுதிகள் அடங்கியது. ஒவ்வொரு சந்திப்பின் போதும் ஒவ்வொரு பாடமாகவோ பல பாடங்களை ஒரு சந்திப்பிலோ படிக்கலாம். மூன்று அல்லது நான்கு சந்திப்புகளில் இதனை முடிக்கவேண்டும்

பாதுகாத்தல் — *1* பேதுரு 5 : 8

பயிற்றுவித்தல் — கொலோசெயர் 2 : 6, 7

ஒரு புதிய கிறிஸ்தவனைப் பயிற்றுவித்தலில் மிக முக்கிய பாகங்களில் ஒன்று அவர் தம் விசுவாசத்தைப் பகிரச் செய்தலே. ''கிறிஸ்துவைப் பகிர்தல்'' என்ற கையேடு புதிய கிறிஸ்தவனை ''இறைவனை அறிதல்'' போன்ற துண்டுப் பிரசுரத்தை பயன்படுத்த வழிகாட்டுகின்றது. ''இறைவனை அறிதல்'' ''கிறிஸ்துவைப் பின் செல்ல'' போன்றவற்றைப் போலவே ''கிறிஸ்துவைப் பகிர்தல்'' ஏடும் கூடவே படிப்பிக்கப்படவேண்டும்.

திறமையான பின் தொடருக்கான திறவு கோல்

அல்லது

ஏசாயா 6 : 8

அப்போ 9 : 6

கிறிஸ்துவா? நானா?

நான் எங்கே இருக்கிறேன்

பிலிப்பியர் 1 : 21 *பிலிப்பியர் 2 : 21*

பெருக்கல்

பெருக்கல் *யோவான் 12 : 24*

உன் வாழ்வை அயலாரில் முதலீடு செய் *மாற்கு 3 : 14 தீமோ 2 : 2*

ஒருவரில் ஆரம்பி *1 சாமு 1 : 27*

ஒருவரில் வாழ்ந்திடு *கொலோ 1 : 28*

4ம் பாடத்திற்கான வீட்டு வேலை

1. கீழ்க்காணும் வேத பாடத்தைப் பூர்த்தி செய்யவும்.
2. ''கிறிஸ்துவில் வாழ்வு'' வேதபாடத்தைப் பூர்த்தி செய்யவும்.
3. ''கிறிஸ்துவில் வாழ்வு'' புத்தகத்தின் முதல் நான்கு வேத வசனங்களை மனப்பாடம் செய்யவும் (யோவான் 3 : 16: 1 கொரி 10 : 13; 1 யோவான் 1 : 9; எபிரேயர் 13 : 5)

கேள்விகள்:

பின் தொடர்பு

1. தெசலோனிக்கேயில் அப்போஸ்தலராகிய பவுலுக்கு வெற்றிகரமான ஊழியம் அமைந்தது. சுருக்கமாக அங்கு நடந்தவற்றைக் கூறவும். 1 தெச 1:5–8

____

____

____

2. அவரது வெற்றியின் இரகசியம் யாது? 1 தெச 2: 7, 8

____

____

3. பின் தொடர்பு ஏன் மிக அவசியமாகின்றது?

____

____

____

____

பின் தொடர்புகளுக்கான நடைமுறை அடிப்படைகள்.

நம் ஆண்டவரும் ஆசானுமாகிய இயேசு நாம் பின்பற்றக்கூடிய ஒரு அடிப்படையைத் தந்துள்ளார். பொதுவாக எல்லாருக்கும் அவரது பணி கிடைத்திருந்தாலும் தனியாக ஒரு சிலரோடு அடிக்கடி அவர் தம் நேரத்தைக் கழித்து வந்தார். ''அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடே கூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும் படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்'' (மாற்கு 3 : 14)

நற்செய்தி ஏடுகளில் அவர் பன்னிருவருடனும் தனியாக ஒதுங்குவதையும், சில வேளைகளில் அப்பன்னிருவரில் ஒரு சிலரோடு, ஒதுங்குவதையும் காண்கிறோம். இவ்வாறு அவர் தம் வாழ்வை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார். விசுவாசப் பரப்புதலுக்காக மாபெரும் சாதனைக்கு இவ்வாறு அவர்களை உருமாற்றினார்.

கிறிஸ்துவால் அறிமுகப்படுத்தப்பட்ட ''அவருடன் இருப்பது'' என்ற அடிப்படைக் கருத்துடன் நெருங்கிய தொடர்புடையதுதான், நம் வாழ்வை இன்னொருவரில் ''முதலீடு'' செய்வதென்பது. இச்சவாலைத்தான் அப்போஸ்தலராகிய பவுல் தீமோத்தேயுவுக்கு விட்டுச் சென்றார். ''அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி'' (2 தீமோ 2 : 2) அதாவது உனக்குக் கட்டளை இடப்பட்டவற்றை நீ இன்னொருவரில் ''முதலீடு'' செய்வதாகும். உனக்கு இடப்பட்ட கட்டளையை இவ்வாறு இன்னொருவருக்குக் கையளிக்கின்றாய்.

4. உன் சொந்த வார்த்தைகளால் மேற்கூறப்பட்ட பந்திகளில் கூறப்பட்டவற்றை இயேசுவும், பவுல் அப்போஸ்தலரும் வெற்றிகரமாகப் பயன்படுத்திய அடிப்படைகளை எழுதுக.

____

____

____

5. பெருக்கல், முதலீடு செய்தல், ஒவ்வொருவராக ஆரம்பித்தல், ஒரு சமயத்தில் ஒருவரைக் கவனித்தல் ஆகிய குறிப்புகள் எப்படியாய் உமது ஊழியத்தை பெருக்கும் என்பதை விளக்கவும். (42ம் பக்கம் காண்க)

____

____

____

____

உமது சபைத் தலைவரின் இடத்தை உம்மால் எடுக்க இயலாது. எனினும் உமது ஜெபத்தாலும், விசுவாசமிக்க முயற்சியினாலும் தனி நபர்கள் வளர்ந்து சபையில் முழுமையான உறுப்பினராகிட ஆன்மீக பெற்றோராக விளங்க உம்மால் உதவ முடியும். அவர்களை நீர் வேத பாடத்திற்கோ, மகநாட்டிற்கோ திறந்தவெளி பெரும் கூட்டங்களுக்கோ, உம்மால் அழைத்துச் செல்ல முடியும். நீர் கூட ஒரு வேதபாடத்தினை நடத்தி உம் புதிய நன்பர்களுக்கு சாட்சி கூறலாம். அப்போது உம்மிடம் ஒப்படைக்கப்பட்டவற்றை இன்னொருவருக்கு ஒப்படைக்கும் பேறு உமக்குக் கிடைக்கின்றது.

6. போஷித்துப் பாதுகாத்துப், பயிற்றுவித்து வழிநடத்திட அநேகம் பேரைக் கூட்டத் தொடரின்போது காண்பீர்கள். அவர்களுக்கு நீர் எவ்வாறு உதவலாம்? மூன்று வழிகளைக் கீழே குறிப்பிடுங்கள்.

____

____

____

சிறு குழுவிற்கான வேதபாட அடிப்படை

3ம் பகுதி கூட்டம்



மூன்று குறிக்கோள்கள்:

குறிக்கோள் 1 **கண்டுபிடித்தல்**

"கடவுள் கூறுவதென்ன ?"

குறிக்கோள் 2 **புரிந்து கொள்ளல்**

"இதன் பொருளென்ன ?"

குறிக்கோள் 3 **பிரயோகித்தல்**

"என் வாழ்க்கையை இது
எவ்வாறு பாதிக்கிறது ?"

அனுபந்தம் 1–1



1. புனித வேதாகமமே
நடுமையான விருந்து

உரையாடலின் கருத்துக்
குறிப்பாக அமைதல்
அவசியம்.



2. பரிசுத்த ஆவியானவரே
நமது நல்லாசான்

அனைவரும் (குழு வழிநடத்துநர்
உட்பட) அவரிடமிருந்தே
கற்கின்றோம்.



3. வழிநடத்துனரும் குழுவினரும் ஒவ்வொருவராக இறைவார்த்தை யையே கண்ணோக்குகின்றனர். (வேதபாடத்தினூடாக நடத்தப் படுகின்றனர்) ஒவ்வொருவரும் வேதத்திலிருந்தே கற்கின்றனர்.



4. குழு உரையாடல் வழிநடத்துனரால் தூண்டப் படுகின்றது. அவர் கேள்வி கள் கேட்டு 20% மணி நேரம் மாத்திரமே பேசுவார்.



5. குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும்
வேதத்தின் உட்கருத்துக்களைப்
பிரயோகித்துத் தான் கற்றுக்
கொண்டதன் பலனை முழுக்
குழுவினரோடும் பகிர்ந்து
கொள்வர்.



அனுபந்தம் 1–4

சிறு வேதபாடக் குழுக்களின் தலைவர்களுக்குக்கான குறிப்புகள்

1. தேவனின் வசனம் என்ன கூறுகின்றது என்பதைக் கண்டுபிடிக்கவே இப்பாடத்தைப் படிக்கின்றோம். அது எவ்வாறு நமது அன்றாட வாழ்வில் நடைமுறையாகின்றது என அறிய வேண்டும்.

2. வழிநடத்துபவர் 20% நேரமே பயன்படுத்துவார், திறமையுடன் கேள்விகள் கேட்டு வழிநடத்தவும் இது ஒரு பிரசங்க நேரமல்ல.

3. பாடம் ஒரு மணித்தியாலம் எடுக்கும், ஒவ்வொரு பகுதிக்கும் நேரம் ஒதுக்கப்பட வேண்டும். நேரத்தைக் கவனித்துக் கொண்டே கூட்டத்தை நடத்திச் செல்லுங்கள். ''சரி சரி அடுத்த விஷயத்தைப் பார்ப்போமா'' என்று மற்றப்பகுதிக்கு வாருங்கள். இப்படியாய் பாடத்தை முழுவதும் கொண்டு செல்லுங்கள்.

4. உரையாடலுக்கான கேள்விகள் ஒவ்வொரு பகுதிக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. அச்சிடப்பட்ட/அக்கேள்விகளுக்கு பல்வேறு பதில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். சில வேளைகளில் நீங்களே சில மேலதிகக் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

   * ஒரு தப்பெண்ணத்தைப் போக்க அல்லது

   * உரையாடலின் சாராம்சத்தை அர்த்தத்துடன் மீளாய்வு செய்ய

   நல்ல கேள்விகளுக்கான குணவியல்புகள்

   1) ஆம்/இல்லை என பதிலிருக்க இயலாது.

   2) தெளிவாகச் சுருக்கமாகக் கேட்கப்படவும், விளங்கிக் கொள்ளப்படவும் கூடியதாக இருத்தல் வேண்டும்.

   3) பல பதில்கள் இருக்கலாம்

5. யாரையும் பெயர் சொல்லிப் பதில் அளிக்க அழைக்க வேண்டாம். அது புத்தி சாலித்தனமானது அல்ல. ஒவ்வொருவராகப் பதில் சொல்லக் கூப்பிட வேண்டாம். அவ்வப்போது இயல்பாக ஒவ்வொருவருக்கும் பதில் வரும் வேளையில் பதிலைச் சொல்லச் சொல்லலாம்.

6. மௌனம் வரவேற்கப்படத்தக்கது! சிந்தனைக்கும் நேரம் தேவை, உரையாடல் கேள்விக்குப் பின்னர் சற்று அமைதியாக ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். மௌன இடைவேளை நீண்டு கொண்டு போனால் 60 வினாடி மாத்திரம் காத்திருந்து ''எல்லாரும் கேள்வியைப் புரிந்து கொண்டீர்களா?'' எனக் கேளுங்கள்.

7. பாடத்தையும், தலைப்பையும் விட்டு விலக வேண்டாம். ஏதாவது காரியம் உங்களை திசைதவறச் செய்வதாய் தோன்றினால் ''அதை இன்னொரு' சமயம் பார்ப்போம் இப்போது இந்தக் காரியத்தைப் பார்ப்போம்'' என்று உரையாடலுக்கான கேள்விக்கு வாருங்கள்.

8. ஒரு உரையாடல் கேள்விக்குப் பல பதில்கள் உண்டு. ஒரு பதில் கிடைத்தவுடன் ''சரி மற்றவர்கள் என்ன நினைக்கிறீர்கள்'' என்று ஒவ்வொருவரும் கேள்வியைத் திருப்பிக் கேளுங்கள்.

9. யாராவது அதிகம் பேசிக் கொண்டேயிருந்து மற்றவர்களை பேசவிடாதிருந்தால் அவர் முடியும் வரை காத்திருந்து ஏனையோரிடம் நீங்கள் ''மற்றவர்கள் இதையிட்டு என்ன சொல்கிறார்கள்'' என்று கேளுங்கள்.

10. குழுத்தலைவர்கள் தங்கள் சொந்த வாழ்வில், தனிப்பட்ட முறையில் நடை முறைப்படுத்த உற்சாகமளியுங்கள். உங்கள் சொந்தத் தேவைகளையும், கண்டுபிடிப்புகளையும் முன்வைத்து வேதாகமத்தின் வல்லமையை வாழ்க்கையில் அனுபவிக்க அழைத்துச் செல்லுங்கள்.

11. இவ்வேலைத் திட்டங்களினால் இறைவசனம், குழுவினரின் வாழ்க்கையில் வல்லமையாய் அனுபவிக்கப்பட வகுக்கப்பட்டுள்ளது. வாரம் தோறும் நடைபெறும் செயற்திட்டத்தில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட முறைகளில் செயலாற்ற வேண்டுமென்பதை எடுத்துரையுங்கள்.

வசன பாடத்திற்கான அடிப்படைகள்

1. கீழ்க்காணும் வசனத்தில் இரு முக்கிய சொற்களை வட்டமிடு
''கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒரு போதும் தள்ளாடவொட்டார்.
(சங்கீதம் 55:22)

2. உன் சொந்த வார்த்தைகளால் வட்டமிடப்பட்ட சொற்களை ஒவ்வொன்றாக விபரித்துச் சொல். அகராதி ஒன்றிருந்தால் பயன்படுத்தலாம்.

முக்கிய சொல் ______________________________

விளக்கம் ______________________________

____

முக்கிய சொல் ______________________________

விளக்கம் ______________________________

____

3. இவ்வசனம் கூறுவதென்ன? (உன் சொந்தச் சொற்களால் மீளவும் எழுது)

4. எனக்கு இவ்வசனம் கூறுவதென்ன? என் வாழ்வில் இன்று இப்போது நான் எப்படிச் செயல்படுத்துவேன்?

5. வசனத்தை மனப்பாடம் செய். (ஒரு சிறு அட்டையில் அவ்வசனத்தை எழுதிக்கொள். மனப்பாடம் செய்து அடிக்கடி தியானம் செய்)

இந்தப் பயிற்சிநெறியை மற்றவர்களுக்குப் படிப்பிக்கும் வழிமுறைகள்

நல்வாழ்த்துக்கள்! கிறிஸ்தவ வாழ்வும் சாட்சியும் என்ற இந்த பயிற்சிநெறியின் விரிவுரைகளைக் கொடுப்பதற்கான இக்குறிப்புகளைப் இப்போது படித்து முடித்திருக்கின்றீர்கள். உங்கள் பகிர்தலுக்கான சில வழிமுறைகளைக் கீழே தருகின்றோம்.

1. ஏனையோருக்குப் படிப்பித்துக் கொடுப்பதில் உற்சாகமாய் புறப்படுங்கள். யாருக்குப் படிப்பிக்கப் போகின்றீர்கள் என்பதனை தீர்மானித்துக் கொள்ளுங்கள். பல சபைகள் சேர்ந்த குழுவினரா, அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட சபைத்தலைவர்களா அவர்கள் எழுப்புதல் நற்செய்திக் கூட்டங்களுக்கு வழி காட்டிகளாக இருக்கப் போகின்றார்களா என குறித்துக் கொள்ளுங்கள்.

2. சம்பந்தப்பட்ட குழுவினரையோ, சபையாரையோ இப்பயிற்சி நெறிபற்றி சந்தித்துப் பேசுங்கள். இது வாரந்தோறும் 1½ முதல் 2 மணித்தியாலமாக நான்கு வாரங்களுக்கு நடக்கும் என்றும், கிறிஸ்தவ வாழ்வையும் சாட்சியத்தையும் பற்றியதாயிருக்கும் என்பதையும் தெளிவு படுத்துங்கள்.

3. நடைபெறும் இடமானது எல்லாருக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும். பொதுவாக எல்லாரும் ஒத்துக் கொள்ளக்கூடிய தேவாலயமாக இருப்பின் நன்று.

4. நீங்கள் தெரிவு செய்த இடத்தின் நிருவாகக் கடமைகளை அவ்விடத்தாரே செய்து கொள்ளக் கூடியதாயிருக்க வேண்டும். அப்போது நீங்கள் படிப்பித்தலில் கவனத்தைச் செலுத்த முடியும். இடம் சம்பந்தமான சில குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

   அ) விசாலமான ஆனால் அளவுக்கதிகமான அளவாயிராத அறை.

   ஆ) பயிற்சிநெறியின் ஆரம்பத்திற்கு முன்னர் ஜெப-வேளை.

   இ) மக்களை வரவேற்க ஒரு விருந்தோம்பலுடன் கூடிய போதகரும், ஜெபத்தில் வழிநடத்த பிறிதொரு போதகரும் விரும்பத்தக்கது. முதலாமவர் எல்லாருக்கும் தெரிந்த பாடலைத் தெரிவு செய்ய, இரண்டாமவர் உம்மை அறிமுகப்படுத்துவார்.

   ஈ) காற்றோட்டம், வெளிச்சம், சீதோஷ்ண வசதிகளை மறந்துவிடாதீர்.

   உ) ஒலிபெருக்கிச் சாதனம் இருக்குமானால், 50 க்கு மேற்பட்ட குழுவிற்குப் பயன் படுத்தலாம்.

   ஊ) 'ஓவர்ஹெட் புரஜக்டர்' எனும் திரையிடும் சாதனம் இருக்குமானால் தயவுசெய்து பயன்படுத்துங்கள். அதற்கான வரைபட மூலப்பிரதிகள், பயிற்சியாளர் கையேட்டில் அனுபந்தத்தில் தரப்பட்டுள்ளன. இச்சாதனம் இல்லாவிட்டால் கரும்பலகையோ, அல்லது படங்களோ, அல்லது சுவரோவியத்தையோ பயன்படுத்தலாம்.

   குறிப்பு: திரைச் சாதனம் பயன்படுத்தாவிட்டால் நீங்கள் கரும்பலகையிலோ, காகிதத்திலோ வரையும் படங்கள் வகுப்பின் அனைவரும் காணக்கூடிய அளவு பெரியவையாக இருத்தல் வேண்டும்.

5. உங்களை அழைத்துள்ள போதகரைச் சில வரவேற்பு உதவியாளர்களைத் தந்துதவ கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். தினசரி இவர்கள் மூலமாக நீங்கள் குறிப்புகளையோ, அல்லது வேறு பிரசுரங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். இவ்வரவேற்பாளர்கள் வேறு பல உதவிகளைச் செய்வர். உதாரணமாக ஓய்வு அறைகளுக்குப் பங்கு பெறுவோரை அழைத்துச் செல்வது முதலியன, கடமைகளைச் செய்வர்.

6. நேர்முகமாகவும், தேர்வுப்புள்ளிகளுக்கும் வழிகாட்டியாக ஒருவர் வரவிரும்பினுல் அதற்காக அவரைத் தெரிவு செய்ய வசதியாக ஒரு படிவம் தரப்பட்டுள்ளது. பயிற்சியின் முடிவில் இதனை அவர்கள் நிரப்பி அங்குள்ள போதகர்களிடம் கொடுக்கலாம். ஒவ்வொரு விண்ணப்பதாரரையும் அவர்கள் விசாரித்தறிந்து பெறுபேறுகள் தருவர். வழிகாட்டியாக வரக்கூடிய தகமைகளை இவ்வாறு அவர்கள் சோதித்தறிவர்.

7. இப்படியாய் தெரிவு செய்யப்பட்டவர்களை தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை பற்றி அறியச்செய்ய வேண்டும். அவர்கள் தாம் வழிகாட்டிகள் என அறிந்த பின்னர் ''மிஷன் வொர்ல்ட்'' எழுச்சிக் கூட்டத்திற்குப் பலநாட்களுக்கு முன்னரே ஒத்திகைக்கு அழைக்கப்பட வேண்டும்.

8. உங்கள் சொந்த ஆயத்தம், தனிமையான பொருத்தமான நேரம் உங்களுக்கு இந்தப் பயிற்சி நெறியை படிப்பிக்கத் தேவை. விஷயத்தை தெளிவாக அறிந்திருப்பதும், கிறிஸ்துவிஞேடு உமது பயணமும் முக்கியமானவை. அதாவது நற்செய்தியை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளுதலும், உம் சொந்த வாழ்க்கையில் அதனை நீர் வாழ்வதும் முக்கியமானது.

சில பயனுள்ள குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

அ) உங்கள் குறிப்புகளையும், பாடநெறிப் புத்தகங்களையும் முழுமையாய் மீளாய்வு செய்து கொள்ளுங்கள். ஒரு முழுநாளை இதற்காக ஒதுக்கி உங்களை வேறு எவருமே தொந்தரவு செய்ய விடாமலிருந்து ஆயத்தப் படுத்திக் கொள்ளுங்கள்.
ஒவ்வொரு வகுப்பிற்கு முன்னரும், ஓரிரு மணிந்தியாலங்கள் எல்லா விடயங்களையும் தியானம் செய்து, ஒவ்வொரு வேதவசனத்தையும் ஜெபித்து நன்ருக ஆயத்தமாகுங்கள்.

ஆ) எல்லா வேத வசனங்களையும் மனப்பாடம் செய்து ஏனையோருக்கு முன்னுதாரனமாய் விளக்குங்கள். ''வசன முறையில்'' காணப்படும் ஆறு வசனங்கள் விசேடமாக மனப்பாடம் செய்யப்பட வேண்டியவை.

இ) திரைக்காட்சிச் சாதனங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். அல்லது வரைப்படங்கள் வரைந்து பழகிக்கொள்ளல் வேண்டும். கரும்பலகையில் எழுதப்பயின்று கொள்ளுங்கள். தாள்களில் வரைய வேண்டுமானுல் முன்பே எழுதிவைத்துக் கொள்ளுங்கள்.

ஈ) ஜெபம்-ஜெபம்-ஜெபம். இதற்கு மாற்றுத் திட்டமே கிடையாது. கிறிஸ்துவில் நடந்திட இதுவே அவசியம். பரிசுத்த ஆவியானவரே உம்மை நல்லாசானுயிருந்து ஏற்றதொரு பாத்திரமாக மாற்றுவார். ஆன்மீகத்தில் உம்மை ஆயத்தமாக்கிட அவர் உதவவேண்டுமென்பதை மறந்துவிட வேண்டாம்.

உ) நாம் படிப்பிப்போருக்கும் ஊழியர்கள் நம்மிடம் அவர்களை அனுப்பியிருக்கும் சபைகளுக்கும், நாம் ஊழியர்களே ! படிப்பிக்கும் போது ஆசானின் திறமைகளை வெளிக்கொணரும் நீர் அடிப்படையில் ஒரு ஊழியன் என்பதை மறந்துவிடவேண்டாம்.

ஊ) அற்புதமான அனுபவமாக இது இருக்கட்டும். படிப்பிப்பது ஆனந்தமும், திருப்தியும் தரும் ஊழியம் ஆகும். இவைகளுக்கு ஆயத்தப்படுத்தியதால் நாமும் வளர்கின்ருேம். பரிசுத்த ஆவியாகிய தேவன் உமக்கும் கற்பித்து வழிநடத்துவார்.